# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),

*********

முறையீட்டு மனு. எண்.857/2016.
ஆணை நாள். 02.07.2018

திரு. ஏ. கிறிஸ்டோபர்,
த/பெ திரு அருளானந்தம்,
முன்னாள் 9வது வார்டு கவுன்சிலர்,
24/79 A- தெற்குத் தெரு,
பூதப்பாண்டி,
கன்னியாகுமரி மாவட்டம். –– முறையீட்டு மனுதாரர்.

பேரூராட்சி முன்னாள் தலைவர்
பேரூராட்சி செயல் அலுவலர்,
மற்றும் பலர்,
பூதப்பாண்டி பேரூராட்சி,
கன்னியாகுமரி மாவட்டம். –– எதிர் மனுதாரர்கள்.

ஆணை.

கன்னியாகுமரி மாவட்டம், பூதபாண்டி, 24/79–A தெற்கு தெருவில் வசிக்கும் திரு.A கிறிஸ்டோபர், த/பெ திரு. அருளானந்தம், முறையீட்டு மனுதாரின் 18.08.2016ம் நாளிட்ட புகார் மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 22.08.2016 அன்று வரப்பெற்று முறையீட்டு மனு எண்.857/16 என எண்ணிடப்பட்டது. முறையீட்டு மனு மீது அறிக்கைகள் பெறப்பட்டும், விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டும், பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் இறுதி ஆணை வெளியிடப்படுகிறது.

கன்னியாகுமரி மாவட்டம், பூதப்பாண்டி பேரூராட்சியில் 2011ம் ஆண்டு முதல் திருமதி.கரோலின் சோபியா க/பெ. திரு பி.ஆலிவர் தாஸ் என்பவர் பேரூராட்சித் தலைவராக

இருந்ததாகவும், மேற்படி பேரூராட்சி மன்ற முன்னாள் தலைவர், மற்றும் செயல் அலுவலர் ஆகியோர் பல்வேறு பணிகளில் முறைகேடுகள் செய்ததாக புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்முறைமன்ற நடுவ 26.08.2016ம் நாளிட்ட அழைப்பாணை மூலம் மேற்படி முறையீடு சம்பந்தமாக முறையீட்டு மனுதாரரின் விளக்கத்தினை இம்முறைமன்ற நடுவத்தில் பதிவு செய்ய 26.09.2016 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராகத் தெரிவித்து ஆணையிடப்பட்டது.

மேற்கண்ட அழைப்பாணையின்படி முறையீட்டு மனுதாரர் திரு.ஏ.கிறிஸ்டோபர். 26.09.2016 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராகி தனது முறையீட்டு மனு தொடர்பான விளக்கத்தினை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"......கடந்த 5 ஆண்டுகளில் குடிநீர் வழங்கும் பணிகளில் மட்டும் சில கோடி ரூபாய் ஊழல் நடந்துள்ளதாகவும், பூதபாண்டி பேரூராட்சிக்குட்பட்ட வடக்குத் தெருவில் துருபிடித்த குழாய் மாற்றுவதற்கு ரூ.1,80,000/- செலவிடப்பட்டுள்ளதாகவும், அதில் பட்டியலில் குறிப்பிடப்பட்ட அளவிற்கு பணிகள் நடைபெறவில்லை எனவும் தெரிவித்து இது போன்று கடந்த 5 ஆண்டுகளில் அனைத்து பணிகளிலும் முறைகேடுகள் நடந்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

இதே போன்று சுதர்சன் மற்றும் சுதா என்ற பெயரில் ஒப்பந்த புள்ளிகள் சமர்ப்பிக்கப்படுவதாகவும் இரண்டுமே சுதர்சன் என்பவரின் பினாமிகள் எனவும், சுதர்சன் என்பவர்தான் சுதா என்ற லெட்டர் பேடிலும், சுதர்சன் என்ற லெட்டர் பேடிலும் அனுப்பி வருவதாகவும் 100 சதவீதம் இவர்கள் இருவர் மட்டுமே ஒப்பந்தங்கள் எடுப்பதாகவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 19.10.2016ம் நாளிட்ட அறிவிப்பாணையில் மேற்படி புகார் மனுவிற்கான விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்கக் கோரி பூதப்பாண்டி பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

பூதப்பாண்டி பேரூராட்சியின் செயல் அலுவலர் தனத கடித ந.க.எண். 163/2016/அ.1/நாள்.08.11.2016ம் நாளிட்ட கடிதம் மூலம் மேற்கண்ட புகார் மனுவிற்கான தனது அறிக்கையினை கீழ்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

பேரூராட்சியில் ஏற்படும் குடிநீர் விநியோகம், பைப்லைன் விஸ்தரித்தல், புது குடிநீர் திட்டங்கள் அமைத்தல், குடிநீர் பைப்லைன் பழுது சரிசெய்தல், மோட்டார் பழுது சரி செய்தல் ஆகிய பணிகளுக்கு பொறியாளர் (பேரூராட்சிகள்) மூலம் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு உதவி செயற்பொறியாளர் (பேரூராட்சிகள்) அவர்களால் தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டு, ஒளிவு மறைவற்ற ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டு, குறைந்த ஒப்பந்தபுள்ளி சமர்ப்பித்த ஒப்பந்தக்காரர்களுக்கு பேரூராட்சிமன்ற ஒப்புதல் பெற்று பணிகள் செயல்படுத்த உத்திரவு வழங்கப்படுவதாகவும், இதில் எந்தவித முறைகேடுகளும் நடைபெறவில்லை எனவும், பணிகள் அனைத்தும் சட்ட விதிகளுக்குட்பட்டு நடைபெற்றுள்ளது எனவும் அரசுக்கு இழப்புகள் ஏதும் இல்லை என்றும் தெரிவித்துள்ளார்.

18.11.2016 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான முறையீட்டு மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள சாட்சி திரு எம்.ஏ.முகம்மது முகைதீன் தனது வாக்குமூலத்தினை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 25.11.2016ம் நாளிட்ட அழைப்பாணையில் முறையீட்டு மனுதாரர் தனது மனுவில் சாட்சிகளாக தெரிவித்துள்ள திரு ஜி.பிரான்சிஸ். திரு. அம்பி, திரு.பி.பி.சாகுல் அமிது மற்றும் திருமதி. லதா அன்பு ஆகியோரை மேற்படி முறையீட்டு மனு தொடர்பான விளக்கத்தினை இம்முறைமன்ற நடுவத்தில் பதிவு செய்ய 26.12.2016 அன்று ஆஜராக தெரிவிக்கப்பட்டு ஆணையிடப்பட்டது.

இவற்றில் திரு ஜிபிரான்சிஸ், என்பவர் மட்டும் இம்முறைமன்ற நடுவத்தில் 26.12.2016 அன்று ஆஜராகி முறையீட்டு மனு தொடர்பான தனது வாக்குமூலத்தினை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.ஏனையோர் ஆஜராகவில்லை.

"....சுதர்சன் என்ற காண்ட்ராக்டர் பேரூராட்சியின் தலைவருக்கு உறவினரா என்ற விவரம் தனக்கு தெரியாது எனவும், ஆனால் மேற்படி நபர் பேரூராட்சி தலைவரின் கணவருக்கு நண்பர் எனவும், பேரூராட்சியில் 30 நபர்கள் பிளம்பர்களாக பதிவு செய்துள்ளதாகவும், சுதர்சன் என்ற நபரை தவிர பதிவு செய்த வேறு எந்த நபருக்கும் பிளம்பிங் காண்ட்ராக்ட் வேலை கொடுப்பது கிடையாது எனவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ29.12.2016ம் நாளிட்ட அழைப்பாணை மூலம் பூதப்பாண்டி பேரூராட்சி செயல் அலுவலரை மேற்படி முறையீட்டு மனு தொடர்பான விளக்கத்தினை அளிக்க இம்முறைமன்ற நடுவத்தில் 15.02.2017ல் ஆஜராக தெரிவித்து ஆணையிடப்பட்டது.

பூதப்பாண்டி பேரூராட்சி செயல் அலுவலர் திரு.R.ஜோஸ்லின்ராஜ் என்பவர் இம்முறைமன்ற நடுவத்தில் 15.02.2017 அன்று ஆஜராகி மேற்படி முறையீட்டு மனு தொடர்பான தனது விளக்கத்தினை பதிவு செய்துள்ளார். அதில்

மனுதாரர் 5 ஆண்டுகாலம் நடைபெற்ற பணிகளை கருத்தில் கொண்டு சுமார் ரூ.80.00 லட்சம் என்று சொல்லியுள்ளதாகவும், பணிகள் ரூ.80.00 லட்சத்திற்கு நடைபெறவில்லை எனவும் ரூ40.00 லட்சத்திற்கு மட்டுமே நடைபெற்றுள்ளதாகவும் இதில் இழப்பீடு ஏதும் இல்லை எனவும் தெரிவித்துளளார். குடிநீர் பராமரிப்பு பணியில் 4 பிளம்பர்கள் மட்டுமே பேரூராட்சியில் பதிவு செய்துள்ளதாகவும் தனது வாக்குமூலத்தில் பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

திரு. சுதர்சன். திரு. சுதா என்பது இரு வேறு நபர்கள் எனவும் ஒரே நபர் என்பது சரியில்லை எனவும் தெரிவித்துள்ளார். திரு.சுதர்சன் மற்றும் திரு.சுதா இருவரும் தனித்தனியாக TIN Number பெற்றுள்ளதாகவும் இருவரும் பெரும்பாலான வேலைகளை செய்தார்கள் எனவும் காரணம் அவர்கள் குறைந்த விலைப்புள்ளி தருவதாகவும் தெரிவித்துள்ளார்.

மேற்கண்ட புகார் மனு தொடர்பாக வாக்குமூலம் பெறவேண்டி பூதப்பாண்டி பேரூராட்சியில் பணிபுரிந்த முன்னாள் செயல் அலுவலர்கள், பொறியாளர், பணி மேற்பார்வையாளர், பணி ஆய்வாளர் உட்பட 5 நபர்களுக்கு இம்முறைமன்ற நடுவ 11.04.2018ம் நாளிட்ட அழைப்பாணை மூலம் 21.05.2018 நேரில் ஆஜராகி தங்களின் வாக்குமூலங்களை பதிவு செய்ய தெரிவித்து ஆணையிடப்பட்டது.

திரு V. ஜார்ஜ், பூதப்பாண்டி பேரூராட்சி உதவி செயற்பொறியாளர், மேற்படி புகார் மனு தொடர்பான தனது வாக்குமூலத்தினை 21.05.2018 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"......தான் 28.02.2014 முதல் தற்போது வரை பணிபுரிந்து வருவதாகவும், திரு.கிறிஸ்டோபர் மனு விவரம் தனக்கு தெரியும் எனவும் தெரிவித்துள்ளார். திரு.சுப்புராஜ், செயல் அலுவலர் தற்போது இல்லை எனவும் தெரிவித்துள்ளதுடன் மனுவில் குறிப்பிட்டுள்ள காலத்தில் அவர் பணியில் இல்லை எனவும் தெரிவித்துள்ளார். குடிநீர் திட்டப் பணிகள் அனைத்தும் விதிகளின்படி ஒப்பந்த புள்ளிகள் கோரியே பேரூராட்சியில் பதிவு செய்த ஒப்பந்தக்காரர்கள் மூலமே செயல்படுத்தப்படுவதாகவும், பேரூராட்சி குடிநீர் பராமரிப்பு பணிகளுக்கு வருடத்திற்கு ரூ.11.00 முதல் ரூ 13.00 லட்சம் செலவாகியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டு அதில் யார் குறைவான ஒப்பந்தபுள்ளிகள் வழங்கியுள்ளார்களோ அவர்களுக்கே பணி வழங்கப்பட்டதாகவும், பேரூராட்சித் தலைவரின் கணவரின் தலையீடு ஏதும் இல்லை எனவும் தெரிவித்துள்ளார் .பினாமி ஒப்பந்தக்காரர்கள் எவரும் இல்லை எனவும் மனுவில் குறிப்பீட்டுள்ளது போன்று போலி ஆவணம் எதுவும் இல்லை எனவும், மேலும் அலுவலக உதவியாளர் திரு. மணிகண்டன் என்பவரின் தலையீடு எதுவும் இல்லை எனவும் தற்போது அவர் இந்த அலுவலகத்தில் பணியிலும் இல்லை எனவும் தனது வாக்குமூலத்தில் உதவி செயற்பொறியாளர் திரு வி.ஜார்ஜ் பதிவு செய்துள்ளார்.

பூதப்பாண்டி முன்னாள் உதவிப் பொறியாளரும் தற்போதைய ஆரல்வாய்மொழி பேரூராட்சி உதவி செயற்பொறியாளருமான திரு.V.சிவசங்கரலிங்கம் தனது வாக்குமூலத்தினை 21.05.2018 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"......தான் அக்டோபர், 2015 முதல் பூதப்பாண்டி பேரூராட்சியில் உதவிப் பொறியாளராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்துள்ளார். திரு.கிறிஸ்டோபர் முறையீட்டு மனு விவரம் தனக்குத் தெரியும் எனவும் திரு.சுப்புராஜ், அவர்கள் தற்போது இல்லை எனவும் மேலும் மனுவில் குறிப்பிட்டுள்ள காலத்தில் அவர் பணியில் இல்லை எனவும் தெரிவித்துள்ளார். குடிநீர் திட்டப் பணிகள் அனைத்தும் விதிகளின்படி ஒப்பந்தப் புள்ளிகள் கோரியே பேரூராட்சியில் பதிவு செய்த ஒப்பந்தக்காரர்கள் மூலமே செயல்படுத்தப்படுவதாகவும் பேரூராட்சி குடிநீர் பராமரிப்பு பணிகளக்கு வருடத்திற்கு ரூ.11.00 முதல் ரூ.13.00 லட்சம் வரை செலவாகியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டு அதில் [illegible] குறைவான ஒப்பந்தபுள்ளிகள் வழங்கியுள்ளவர்களுக்கே பணி வழங்கப்பட்டுள்ளதாகவும், பேரூராட்சித் தலைவியின் கணவரின் தலையீடு ஏதும் இல்லை எனவும் பினாமி ஒப்பந்தக்காரர்கள் எவரும் இல்லை எனவும் தெரிவித்துள்ளார். மனுவில் குறிப்பிட்டுள்ளது போல் போலி ஆவணம் ஏதும் இல்லைஎனவும் திரு. மணிகண்டன், அலுவலக உதவியாளரின் தலையீடு எதுவும் இல்லை எனவும் அவர் தற்போது இவ்வலுவலகத்தில் பணியில் இல்லை எனவும் திரு.வி.சிவசங்கரலிங்கம் உதவி பொறியாளர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

திரு. எல்.சீனிவாசன் (எ) மகேஷ், இளநிலை பொறியாளர் மேற்படி முறையீட்டு மனு தொடர்பாக தனது வாக்குமூலத்தினை இம்முறைமன்ற நடுவத்தில் 21.05.2018 அன்று கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"......நான் 01.03.2014 முதல் அக்டோபர் 2015 வரை இளநிலை பொறியாளராக ஆரல்வாய்மொழி பேரூராட்சியில் பணிபுரிந்துள்ளதாகவும் திரு. கிறிஸ்டோபர் முறையீட்டு மனு விவரம் தனக்கு தெரியும் எனவும் தெரிவித்துள்ளார். திரு. சுப்புராஜ் தற்போது இல்லை எனவும், மனுவில் குறிப்பிட்டுள்ள காலத்தில் அவர் பணியில் இல்லை எனவும் தெரிவித்துள்ளார். குடிநீர் திட்டப் பணிகள் அனைத்தும் விதிகளின்படி ஒப்பந்தப்புள்ளிகள் கோரியே பேரூராட்சியில் பதிவு செய்த ஒப்பந்தக்காரர்கள் மூலம் செய்யப்பட்டதாகவும் இத்திட்டப் பணிக்கு ஆண்டொன்றுக்கு ரூ 11.00 லட்சம் முதல் ரூ 13.00 லட்சம் வரை செலவாகியுள்ளதாகவும், இப்பணிகளுக்கு ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு அதில் குறைவான ஒப்பந்தபுள்ளி வழங்கியுள்ளவர்களுக்கே பணி வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். பேரூராட்சியின் தலைவியின் கணவரின் தலையீடு ஏதும் இல்லை எனவும் பினாமி ஒப்பந்தக்காரர்கள் எவரும் இல்லை எனவும் தெரிவித்துள்ளார். மனுவில் குறிப்பிட்டுள்ளது போல் போலியான ஆவணங்கள் ஏதும் இல்லை எனவும் திரு. மணிகண்டன் அலுவலக உதவியாளரின் தலையீடு எதுவும் இல்லை மற்றும் அவர் தற்போது இவ்வலுவலகத்தில் இல்லை எனவும் தனது வாக்குமூலத்தில் திரு எல்.சீனிவாசன் (எ) மகேஷ் தெரிவித்துள்ளார்.

பூதப்பாண்டி பேரூராட்சி முன்னாள் பணி ஆய்வாளரும் தற்பாதைய விலவூர் பேரூராட்சி பணி ஆய்வாளருமான திரு. N. ஹரிதாஸ் மேற்படி முறையீட்டு மனு தொடர்பான தனது வாக்குமூலத்தினை 21.05.2018 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"......நான் 01.08.2014 முதல் 02.03.2016 வரை பூதப்பாண்டி பேரூராட்சியில் பணி ஆய்வாளராக பணிபுரிந்து வந்ததாகவும் திரு. கிறிஸ்டோபர் என்பவரின் முறையீட்டு மனு குறித்து தனக்கு தெரியும் எனவும் தெரிவித்துள்ளார். திரு. சுப்புராஜ் என்பவர் தற்போது இல்லை எனவும் மனுவில் குறிப்பிட்டுள்ள காலத்தில் அவர் பணியில் இல்லை எனவும் தெரிவித்துள்ளார். குடிநீர் திட்டப் பணிகள் அனைத்தும் விதிகளின்படியே ஒப்பந்தபுள்ளிகள் கோரியே பேரூராட்சியில் பதிவு செய்த ஒப்பந்தக்காரர்கள் மூலமே செயல்படுத்தப்படுகின்றன. பேரூராட்சி குடிநீர் பராமரிப்பு பணிகளுக்கு வருடத்திற்கு ரூ.11.00 லட்சம் முதல் ரூ 13.00 லட்சம் செலவாகியுள்ளதாகவும், ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டு அதில் குறைவான ஒப்பந்தப்புள்ளிகள்வழங்கியுள்ளவர்களுக்கேபணி வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். பேரூராட்சித் தலைவரின் கணவரின் குறுக்கீடு ஏதும் இல்லை எனவும், பினாமி ஒப்பந்தக்காரர்கள் எவரும் இல்லை எனவும் தெரிவித்துள்ளார். மனுவில் குறிப்பிட்டுள்ளது போல் போலி ஆவணம் ஏதும் இல்லை எனவும் திரு. மணிகண்டன் அலுவலக உதவியாளரின் தலையீடு ஏதும் இல்லை எனவும் அவர் தற்போது இந்த அலுவலகத்தில் இல்லை எனவும் தெரிவித்துள்ளார்.

பூதப்பாண்டி பேரூராட்சி முன்னாள் பணி ஆய்வாளரும் தற்போது நாகர்கோவில் மண்டல பணி ஆய்வாளராக பணிபுரியும் திரு. N லிங்கேஸ்வரன் 21.05.2018ம் தேதியன்று

இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராகி மேற்படி முறையீட்டு மனு தொடர்பான தனது வாக்குமூலத்தினை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்,

"........ தான்அக்டோபர் 2011 முதல் 31.07.2014 வரை பூதப்பாண்டி பேரூராட்சியில் பணி ஆய்வாளராக பணிபுரிந்து வந்ததாகவும், திரு. கிறிஸ்டோபரின் முறையீட்டு மனு குறித்து தனக்கு தெரியும் எனவும் தெரிவித்துள்ளார். திரு.சுப்புராஜ், தற்போது இல்லை மனுவில் குறிப்பிட்டுள்ள காலத்தில் அவர் பணியில் இல்லை எனவும் தெரிவித்துள்ளார். குடிநீர் திட்டப் பணிகள் அனைத்தும் விதிகளின்படி ஒப்பந்தப் புள்ளிகள் கோரியே பேரூராட்சியில் பதிவு செய்த ஒப்பந்தக்காரர்கள் மூலமே செயல்படுத்தப்பட்டதாகவும், குடிநீர் திட்டப்பணிகளுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.11.00 லட்சம் முதல் ரூ.13.00 லட்சம் வரை செலவாகியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு அதில் குறைவான ஒப்பந்தபுள்ளி வழங்கியவருக்கே பணி வழங்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். பேரூராட்சித் தலைவரின் கணவரின் குறுக்கீடு எதுவும் இல்லை எனவும், பினாமி ஒப்பந்தக்காரர்கள் எவரும் இல்லை எனவும் தெரிவித்துள்ளார். மனுவில் குறிப்பிட்டுள்ளது போல் போலி ஆவணம் ஏதும் இல்லை எனவும் திரு. மணிகண்டன் அலுவலக உதவியாளரின் தலையீடு எதுவும் இல்லை எனவும் அவர் தற்போது இந்த அலுவலகத்திலும் இல்லை எனவும் தனது வாக்குமூலத்தில் திரு என்.லிங்கேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில் முறையிட்டு மனுதாரரின் புகார் மனு, பூதப்பாண்டி பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை, முறையீட்டு மனுதாரர், முறையீட்டு மனுதாரரால் தெரிவிக்கப்பட்ட விசாரணைக்கு ஆஜரான சாட்சிகள், மற்றும் பூதப்பாண்டி பேரூராட்சியில் பணிபுரிந்த அலுவலர்களின் வாக்குமூலங்கள் ஆகியவை பெறப்பட்டு பரிசீலிக்கப்பட்டன.

முறையீட்டு மனுதாரர் தனது புகார் மனுவில் தெரிவித்துள்ள செயல் அலுவலர் திரு சுப்புராஜ் என்பவர் மனுவில் குறிப்பிட்டுள்ள காலத்தில் மேற்படி பேரூராட்சியில் பணியில் இல்லை என மனுதாரரால் குற்றம்சாட்டப்பட்ட இதர அலுவலர்கள் தங்களின் வாக்குமூலங்களில் பதிவு செய்துள்ளனர். இதன் அடிப்படையில் மேற்படி பேரூராட்சியில் பணியில் இல்லாத நிலையில் அவர் மீது புகார் தெரிவித்திருப்பது ஏற்புடையதாக இல்லை. மேலும் மனுதாரர் தனது புகார் மனுவில் தெரிவித்துள்ள மனுதாரர் தரப்பில் சாட்சி திரு எம்.ஏ.முகம்மது முகைதீன் மட்டும் 18.11.2016 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராகி வாக்குமூலமளித்துள்ளார். ஆனால் 18.11.1026 ஆஜராகிய முறையீட்டு மனுதாரர் தெரிவித்த சாட்சிகள் திரு.பிரான்சிஸ், திரு..அம்பி, திரு. பி.பி.சாகுல் அமீது மற்றும் திருமதி. லதா அன்பு ஆகியோரின் வாக்குமூலங்களை பெற இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராக அழைப்பாணை அனுப்பியிருந்தும் திரு. பிரான்சிஸ் தவிர ஏனையோர் இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராகவில்லை. முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவுடன், தான் தெரிவித்துள்ள புகார்களுக்கான எந்தவிதமான ஆதார ஆவணத்தினையும் சமர்ப்பிக்கவில்லை. மேற்படி பணிகளில் பேரூராட்சித் தலைவரின் கணவரின் தலையீடு இல்லை எனவும் அலுவலக உதவியாளர் திரு.மணிகண்டன் என்பவரின் தலையீடும் இல்லை என அனைத்து அலுவலர்களும் தங்கள் வாக்குமூலங்களில் பதிவு செய்துள்ளனர்.

எனவே முறையீட்டு மனுதாரர் தனது மனுவில் தெரிவித்துள்ள சாட்சிகள் இம்முறைமன்ற நடுவத்தில் தங்களுடைய வாக்குமூலங்களை பதிவு செய்ய தவறியுள்ளதும் மனுவில் தெரிவித்துள்ள திரு. சுப்புராஜ், செயல் அலுவலர், என்பவர் மனுவில் குறிப்பட்டுள்ள காலத்தில் இப்பேரூராட்சியில் பணியில் இல்லாத நிலையில் மனுதாரர் அவர் மீது குற்றம் சாட்டி தனது மனுவினை சமர்ப்பித்துள்ளதும் ஏற்புடையதாக இல்லை. மேலும் மனுதாரர் தனது மனுவில் தெரிவித்துள்ள புகார்களுக்கான எந்தவிதமான ஆதார ஆவணங்களையும் சமர்ப்பிக்காத நிலையில் பொத்தாம் பொதுவாக கூறப்பட்டுள்ள புகார்கள் அடங்கிய மேற்படி புகார் மனு ஏற்கத்தக்கதல்ல எனக் கருதி தள்ளுபடி செய்து மேல் நடவடிக்கை கைவிடப்படுகிறது என தெரிவித்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2018 –ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 02 –ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.**

**–//உத்திரவின்படி – அனுப்பப்படுகிறது//–**

**செயலாளர்.**

பெறுநர்

**1.திரு. ஏ.** [illegible]
த/பெ திரு அருளானந்தம்,
முன்னாள் 9வது வார்டு கவுன்சிலர்,
24/79 A- தெற்குத் தெரு,
பூதப்பாண்டி,
கன்னியாகுமரி மாவட்டம்.

2.செயல் அலுவலர்,
பூதப்பாண்டி பேரூராட்சி,
கன்னியாகுமரி மாவட்டம்.

3.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
கன்னியாகுமரி மண்டலம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
நாகர்கோவில்.